சுருக்கம்

சென்னை மாநகராட்சி – மின் ஆளுமை முறைமை அமலாக்கம் – இந்திய அரசு நகர்புற வளர்ச்சி அமைச்சகத்தின் மத்திய ஒப்புதல் மூலம் பெறப்பட்ட மின் ஆளுமை முறைமை திட்டத்தினை செயல்படுத்துதல் – ரூ.1206.69 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.144 நாள்: 03.08.2010

ஆடி – 18,
திருவள்ளுவர் ஆண்டு – 2041

படிக்க:

1) அரசு ஆணை (நிலை) எண்.119, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26.06.2008
2) சென்னை மாநகராட்சி ஆணையரின் கடிதம் எண்.இ.டி.பி.ந.க.எண்.சி1/539/2009, நாள் 20.05.2010

* * * * *

ஆணை:

சென்னை மாநகராட்சி ஆணையர், சென்னை மாநகராட்சியின் மாமன்ற தீர்மானத்தின்படி சென்னை மாநகராட்சியில் அனைத்து நடவடிக்கைகளும் கணிணி மயமாக்க தமிழ்நாடு அரசு நிறுவனமான எல்காட் நிறுவனம் மூலம் மின் ஆளுமை (e-Governance) முறையை செயல்படுத்தவும், இத்தொகைக்கான அரசு அனுமதி பெறவும் பின்னர் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டம் (JNNURM) மானியம் பெறவும் அனுமதி பெறப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

2. மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசு ஆணையில் சென்னை மாநகராட்சியில் மின் ஆளுமைத் திட்டத்தை எல்காட் நிறுவனம் மூலம் நிறைவேற்ற ரூ.4,68,70,065/– தொகைக்கு மட்டும் அரசின் நிர்வாக ஒப்பளிப்பு ஆணை அளிக்கப்பட்டுள்ளது. மேலும் சென்னை மாநகராட்சியில் மின் ஆளுமை முறையை செயல்படுத்த ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்ட வழிகாட்டுதலின்படி திருவாளர் விப்ரோ நிறுவனம் மூலம் ரூ.1946.11 இலட்சங்கள் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

3. சென்னை மாநகராட்சி ஆணையர் மாநில அரசால் தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு கழகம் மூலம் (TUFIDCO) பரிந்துரைக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது என்றும், இந்திய அரசு நகர்புற வளர்ச்சி அமைச்சகத்தின் மத்திய ஒப்புதல் மற்றும் கண்காணிப்பு குழுமத்தால் 22.01.2010 அன்று நடைபெற்ற கூட்டத்தில்

ரூ.1206.69 இலட்சம் மதிப்பிற்கு திட்ட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்றும், இந்த ஒப்புதலின்படி ஏற்கப்பட்ட திட்ட மதிப்பீட்டில் 35% மைய அரசிடம் இருந்து மானியமாகவும் 15% மாநில அரசிடம் இருந்து மானியமாகவும், தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் அடிப்படைவசதி மேம்பாட்டு கழகம் (TUFIDCO) மூலம் பெறப்பட உள்ளதாகவும் மீதமுள்ள 50% செலவினம் சென்னை மாநகராட்சியால் ஏற்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்து சென்னை மாநகராட்சியில், மின் ஆளுமைத் திட்டத்தினை செயல்படுத்த இந்திய அரசு நகர்புற வளர்ச்சி அமைச்சகத்தின் மத்திய ஒப்புதல் மற்றும் கண்காணிப்பு குழுமத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ள ரூ.1206.69 இலட்சங்களுக்கு அரசின் நிர்வாக அனுமதி வேண்டியுள்ளார். மேலும் 29.04.2010 அன்று நடைபெற்ற சென்னை மாநகராட்சி மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கை சுருக்கம் தீர்மான எண்.176/2010 ன் படி மன்ற அனுமதியும் பெறப்பட்டுள்ளதாக சென்னை மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. சென்னை மாநகராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து சென்னை மாநகராட்சியில் இந்திய அரசு நகர்புற வளர்ச்சி அமைச்சகத்தின் மத்திய ஒப்புதல் மற்றும் கண்காணிப்பு குழுமத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ள மின்ஆளுமைத் திட்டத்தினை செயல்படுத்த ரூ.1206.69 இலட்சங்களுக்கு நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் (அ.சா.கு.எண்.30396/ந.நி.(ம).கு.வ./10, நாள் 30.06.2010). இசைவுடன் வெளியிடப்படுகிறது.

/ ஆளுநரின் ஆணைப்படி /

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3
இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை துறை, குறளகம், சென்னை – 108
மாநில கணக்காயர், சென்னை – 18 / 35

நகல்:
மேலாண்மை இயக்குநர், எல்காட் நிறுவனம், சென்னை – 35
மாண்புமிகு முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர், சென்னை – 9
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர், சென்னை – 9
மாண்புமிகு நிதியமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9
தலைமைச் செயலரின் தனிச் செயலர், சென்னை – 9
நிதி (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) துறை, சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளரின் தனி செயலர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2/வரவு/செலவு) துறை, சென்னை – 9
இருப்பு கோப்பு / உதிரி நகல்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்